Impact Factor (QJIF): 8.47 E-ISSN: 2583-1615, P-ISSN: 3049-3498

International Journal of Research in Academic World

**Received:** 17/March/2026 **IJRAW:** 2026; 5(5):79-83 **Accepted:** 29/April/2026

# சம்பந்தர் தேவாரத்தில் உணர்வு வெளிப்பாடு

*[1]**ச.மோகன்ராஜ்**

*[1]பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், நெறியாளர்: முனைவர் இரா.மணிமேகலை, இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

**சுருக்கம்**

பக்தி இலக்கியத்தின் முதன்மை நோக்கம் இறைவனை உணர்வுப்பூர்வமாகத் துதிப்பதாகும். அந்த வகையில், பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடிய திருஞானசம்பந்தரின் பாடல்களில் பக்தி உணர்வு என்பது வெறும் கருத்தாக நிலவாமல், அது உடலிலும் உள்ளத்திலும் வெளிப்படும் 'மெய்ப்பாடாக' உருமாற்றம் பெற்றுள்ளது. தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் இலக்கணத்தைக் கொண்டு சம்பந்தரின் பாடல்களை அணுகும் போது, அதில் மருட்கை (வியப்பு), உவகை (மகிழ்ச்சி), அழுகை (இரக்கம்) போன்ற உணர்வுகள் எவ்வாறு ஆன்மீக ஆழத்துடன் வெளிப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது. குறிப்பாக, பக்தி என்ற ஒற்றைச் சொல் எத்தகைய நுட்பமான உணர்ச்சிப் பரிமாணங்களைக் கொண்டது என்பதைச் சம்பந்தர் தேவாரத்தின் வழி நிறுவுவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**முக்கிய சொல்:** திருஞானசம்பந்தர் தேவாரம், தொல்காப்பிய மெய்ப்பாட்டியல், பக்தி இலக்கியம், உணர்வு வெளிப்பாடு.

## முன்னுரை

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" எனத் தொடங்கும் வரிகள் தமிழ் பக்தி இலக்கியத்தின் உணர்வு வெளிப்பாட்டிற்கு மிகச்சிறந்த சான்றாகும். திருமுறை ஆசிரியர்களில் 'திராவிடச் சிசு' எனப் போற்றப்படும் திருஞானசம்பந்தர், தமிழை இசையோடும் உணர்ச்சியோடும் இணைத்துப் பாடியவர். ஒரு கவிஞன் தான் உணர்ந்ததை மற்றவர்களுக்குக் கடத்தப் பயன்படுத்தும் கருவியாக அமைவது 'மெய்ப்பாடு' ஆகும்.

தமிழில் உணர்ச்சிகளை வகைப்படுத்திய தொல்காப்பிய மெய்ப்பாட்டியல், "உள்ளத்து உணர்வு புறத்து வெளிப்படுவது மெய்ப்பாடு" என்கிறது. சங்க இலக்கியங்களில் அகம் மற்றும் புறம் சார்ந்து வெளிப்பட்ட இந்த மெய்ப்பாடுகள், இடைக்காலப் பக்தி இலக்கியமான தேவாரத்தில் இறைவனை நோக்கிய 'பேருணர்வாக' மலர்ச்சி பெற்றன. சம்பந்தர் பாடல்களில் காணப்படும் இயற்கை வருணனைகள், அடியவர்களின் நிலை மற்றும் இறைவனின் திருவிளையாடல்கள் யாவும் மெய்ப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. இக்கட்டுரை, சம்பந்தரின் தேவாரப் பாடல்களில் பொதிந்துள்ள மெய்ப்பாட்டு நுணுக்கங்களையும், அவை ஒரு பக்தனின் ஆன்ம வெளிப்பாடாக அமையும் விதத்தையும் ஆய்வுக்கு உட்படுத்துகிறது.

## தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் - ஓர் அறிமுகம்

தமிழில் உணர்ச்சிக் கோட்பாடுகளை அறிவியல் பூர்வமாகவும், இலக்கியத் தரம் குறையாமலும் அணுகிய முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள 'மெய்ப்பாட்டியல்' எனும் இயல், கவிதை மற்றும் நாடக மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகள் எவ்வாறு புறத்தில் வெளிப்படுகின்றன என்பதை விளக்குகிறது.

***Corresponding Author:** ச.மோகன்ராஜ்

### மெய்ப்பாடு

"மெய்ப்பாடு" என்பது உள்ளத்தில் நிகழும் உணர்ச்சிகள் உடலின் உறுப்புகள் வாயிலாகப் புறத்தார்க்குப் புலப்படுவதைக் குறிக்கும். இச்சொல் 'மெய்' (உடல்) மற்றும் 'பாடு' (தோன்றுதல்) எனப் பொருள்படும். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலின் தொடக்கத்திலேயே, மெய்ப்பாடுகள் நாடக அரங்கிலும் (பண்ணை) உலகியலிலும் எவ்வாறு வகைப்படுகின்றன என்பதை விளக்குகிறார். இதனை,

"பண்ணைத் தோன்றிய எண் நான்கு
பொருளும்
கண்ணிய புறனே நால் நான்கு என்ப."
(தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் 1)

என்ற நூற்பாவின் வழி, உள்ளத்து உணர்வுகள் புறத்தில் (உடலில்) வெளிப்படும் நிலைகளைக் குறிப்பிடுகிறார். இவ்வாறு அகத்தில் தோன்றும் குறிப்புகள் புறத்தில் மெய்யின்கண் (உடலில்) புலப்படுவதால் இது 'மெய்ப்பாடு' என வழங்கப்படுகிறது. இதனைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் விளக்கும்போது, உள்ளத்து உணர்வுகள் உடல் வழியாகத் தோன்றுவது என்கின்றனர். நகை, அழுகை, இளிவரல் உள்ளிட்ட எட்டு வகை மெய்ப்பாடுகளும் உடலில் தோன்றும் மாற்றங்கள் மூலம் பிறருக்கு உணர்த்தப்படுகின்றன.

### எண்வகை மெய்ப்பாடுகள்

உலகியல் மாந்தர்களிடம் தோன்றும் உணர்வுகளைத் தொல்காப்பியர், எட்டு மெய்ப்பாடுகளாக வகுத்துக் கொடுத்துள்ளார். இதனை,

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.
(தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் 3)

**அவை:**

- i). **நகை:** சிரிப்பு (எள்ளல், இளமை, அறியாமை போன்றவற்றால் தோன்றுவது).
- ii). **அழுகை:** வருத்தம் (இழப்பு, இழிவு, வறுமை போன்றவற்றால் தோன்றுவது).
- iii). **இளிவரல்:** சிறுமை அல்லது அருவருப்பு.
- iv). **மருட்கை:** வியப்பு (புதுமை, பெருமை, சிறுமை போன்றவற்றால் தோன்றுவது).
- v). **அச்சம்:** பயம் (விலங்கு, கள்வர், தெய்வம் போன்றவற்றால் தோன்றுவது).
- vi). **பெருமிதம்:** வீரம் அல்லது பெருமை (கல்வி, தறுகண், இசைமை போன்றவற்றால் தோன்றுவது).
- vii). **வெகுளி:** சினம்.
- viii). **உவகை:** மகிழ்ச்சி (செல்வம், புணர்வு, அறிவு போன்றவற்றால் தோன்றுவது).

### பக்தி இலக்கியத்தில் மெய்ப்பாடுகள்

சங்க இலக்கியங்களில் இம்மெய்ப்பாடுகள் பெரும்பாலும் மானுடக் காதலையும் (அகம்), போர்க்கள வீரத்தையும் (புறம்) பாடுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. ஆனால், திருஞானசம்பந்தர் காலத்துப் பக்தி இலக்கியத்தில் இக்கோட்பாடு ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது. இங்கு 'தலைவன்' என்பவன் இறைவனாகவும், 'தலைவி' அல்லது 'மாந்தர்' என்போர் அடியவர்களாகவும் மாறினர். இதனால், உலகியல் சார்ந்த 'அழுகை' என்பது இறைவனுக்காக உருகும் பக்தி அழுகையாகவும், உலகப் பொருட்களின் மீதான மருட்கை என்பது இறைவனின் திருவிளையாடல்கள் மீதான வியப்பாகவும் உயர்வு பெற்றது.

### சம்பந்தர் தேவாரத்தில் எண்வகை மெய்ப்பாடுகள்

தொல்காப்பியர் வகுத்த எண்வகை மெய்ப்பாடுகளும் திருஞானசம்பந்தரின் பதிகங்களில் உலகியல் எல்லைகளைக் கடந்து, இறை அனுபவங்களாகப் பரிணமிக்கின்றன.

### 1. நகை (எள்ளல் சார்ந்த பக்தி)

திருஞானசம்பந்தர் பாடல்களில் இறைவனின் பேராற்றலை அறியாது எதிர்த்தவர்களின் அறியாமையைக் கண்டும், புறச்சமயத்தவர் செய்யும் அறியாமை மிக்க செயல்களைக் கண்டும், குழந்தைப் பருவ முதிர்ச்சியின்மையைக் கண்டும், ஒன்றை மற்றொன்றாகத் தவறாகப் புரிந்துகொண்டு செயல்படுதலாலும் எள்ளல் (கிண்டல்) குறிப்பில் நகை மெய்ப்பாடு வெளிப்படுவதை அறியமுடிகிறது. தொல்காப்பியர் நகைக்குக் கூறிய "எள்ளல் இளமை பேதைமை மடன்" (தொல். மெய். 4) என்ற நான்கு காரணங்களும் சம்பந்தர் தேவாரத்தில் பக்திச் சுவையோடு பயின்று வருகின்றன.

"மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையின் மாமழு வாளனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே"
(சம்பந்தர் தேவாரம், திருமுறை: 3, பதிகம்: 108, பாடல்: 3)

இப்பாடலில், வேத நெறிகளைப் பின்பற்றாத சமணர்களின் நிலையைச் சம்பந்தர் சுட்டிக்காட்டுகிறார். ஒருவரது உருவத்தை எள்ளி நகையாடும் 'இளமை' மற்றும் 'எள்ளல்'

ஆகிய தன்மைகள் இங்கு வெளிப்படுகின்றன. தலையில் மயிர் பறிக்கப்பட்ட கோலத்தையும் (பறிதலை), ஆடைக்கு மாற்றாகப் பாயைச் சுற்றிக் கொண்டு திரியும் நிலையையும் (பாயுடுப்பார்) இகழ்ச்சிக் குறிப்புடன் விளக்கும்போது நகை மெய்ப்பாடு தோன்றுகிறது.

உண்மையான சிவதத்துவத்தை அறியாது வஞ்சகமாகத் திரியும் அவர்களின் அறியாமையை 'பேதைமை' மற்றும் 'மடன்' எனக் கருதி, அவர்கள் வாதத்தில் தோற்று ஓட வேண்டும் என வேண்டுவதன் மூலம், எதிரியின் மதியீனத்தைச் சிரிப்புக்குரிய ஒன்றாகச் சம்பந்தர் மாற்றுகிறார். கையில் மழுவேந்திய இறைவனின் பேராற்றலுக்கு முன்னால், இத்தகைய சிறுநெறிகள் நிற்க இயலாது என்பதை எள்ளல் தொனியில் பாடுகிறார் சம்பந்தர்.

### 2. அழுகை (பக்தி உருக்கம்)

உலகியல் வாழ்வில் ஏற்படும் இழப்புகளால் தோன்றும் அழுகையைத் தாண்டி, இறைவனின் பேரருளை எண்ணி நெகிழ்ந்து உருகும் ஒரு மேன்மையான நிலையைச் சம்பந்தர் பாடல்களில் காணமுடிகிறது. தொல்காப்பியர் அழுகை பிறப்பதற்குக் கூறும் காரணங்களாக,

"இளிவே இழவே அசைவே வறுமை என
விளிவு இல் கொள்கை அழுகை நான்கே"
(தொல். மெய். 5)

எனப் பட்டியலிடுகிறார். இதில் 'இளிவு' மற்றும் 'வறுமை' ஆகிய நிலைகள் அடியவர்களின் பொருட்டும், 'இழவு' (பிரிவு) என்பது இறைவனைப் பிரிய நேருமோ என்ற அச்சத்தின் பொருட்டும் பக்தி அழுகையாக உருமாற்றம் பெறுகின்றன.

அழுகை என்பது தீராத துன்பத்தால் மட்டும் ஏற்படுவதன்று. மாறாக அறைவன் மேல் கொண்ட அன்பினால் விளைவதும் உண்டு. இறைவனின் திருநாமத்தைச் சொல்லும்போது பக்தி மிகுதியால் கண்கள் நீர் சொரிவது பக்தியின் மிகப்பெரிய நிலை ஆகும். இந்தச் செய்தியினை

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே."
(சம்பந்தர் தேவாரம், திருமுறை: 3, பதிகம்: 49, பாடல்: 1)

என்னும் பாடலால் சிறப்பாக உணரமுடிகிறது. மேலும், திருவாவடுதுறைப் பதிகத்தில், தன் தந்தை வேள்வி செய்யப் பொன் வேண்டி நின்றபோது, அடியவர்களின் வறுமை நிலை கண்டு உருகி, "இடரினும் தளரினும் எனதுறு நோய்" என்று பாடி இறைவனிடம் முறையிடுவது 'வறுமை' எனும் காரணத்தால் பிறக்கும் அழுகை மெய்ப்பாட்டை உணரமுடிகிறது.

### 3. இளிவரல் (சிறுமை/அருவருப்பு)

இளிவரல் என்பது ஒரு பொருளின் மீது உண்டாகும் அருவருப்பு அல்லது ஒருவரின் நிலைகண்டு தோன்றும் சிறுமை உணர்வாகும். தொல்காப்பியர்,

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே"
(தொல். மெய். 6)

என்று இதற்கு இலக்கணம் வகுக்கிறார். சம்பந்தர் தேவாரத்தில் இம்மெய்ப்பாடு இரண்டு நிலைகளில் வெளிப்படுகிறது: ஒன்று, புறச்சமயத்தவர்களின் ஆசாரங்களைக் கண்டு தோன்றும் அருவருப்பு; மற்றொன்று, இறைவனின் பேரருளுக்கு முன்னால் அடியவர்கள் தங்களை மிகச் சிறியவர்களாகக் கருதும் தாழ்மை உணர்வு.

சம்பந்தர் தனது பதிகங்களின் பத்தாவது பாடல்களில் பெரும்பாலும் புறச்சமயங்களின் குறைகளைச் சுட்டிக்காட்டுவார்.

"குண்டாடும் சமணருஞ் சாக்கியப் பேய்களும்
மிண்டாடும் உரைகேளாது ஏறுயர்த்தான்
எழிலார்ந்த
வண்டாடும் பொழிற்சீகாழி நன்னகரே...
(சம்பந்தர் தேவாரம், திருமுறை: 3, பதிகம்:55, பாடல்: 10)

என வரும் பாடலில், குளிப்பதைக் கைவிட்ட சமணர்களின் அழுக்கு மெய்யையும், அவர்களது வீணான வாதங்களையும் குறிப்பிடும்போது 'இளிவரல்' மெய்ப்பாடு வெளிப்படுகிறது. இங்கு 'சாக்கியப் பேய்கள்' போன்ற சொற்கள் அருவருப்பின் அடிப்படையில் வந்த இளிவரலாகும். மேலும், உலகியல் வாழ்வின் நிலையாமையைக் கூறி, உடல் மூப்படைந்து பிணிக்கு ஆளாவதைச் சுட்டிக்காட்டும் இடங்களிலும் மூப்பு, பிணி சார்ந்த இளிவரல் மெய்ப்பாட்டினைச் சம்பந்தர் வெளிப்படுத்துகிறார்.

### 4. மருட்கை (வியப்பு)

மருட்கை என்பது ஒரு பொருளின் புதுமை, அதன் வியக்கத்தக்க ஆற்றல் அல்லது பிரம்மாண்டத்தைக் கண்டு அடையும் வியப்பு நிலையாகும். தொல்காப்பியர் மருட்கை தோன்றுவதற்கான காரணங்களாக,

"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே."
(தொல். மெய். 7)

என்று இலக்கணம் கூறுகிறார். இதில் புதுமை மற்றும் ஆக்கம் (இல்லாத ஒன்று தோன்றுதல்) ஆகிய நிலைகள் சம்பந்தர் தேவாரத்தில் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களோடு இணைந்து மருட்கை மெய்ப்பாட்டினைத் தோற்றுவிக்கின்றன.

மயிலாப்பூரில் இறந்த பெண்ணின் எலும்பைப் பூம்பாவையாக மீண்டும் உயிர் பெற்று எழச் செய்த 'ஆக்கம்' நிறைந்த அற்புதப் பாடலான,

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்
சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்."
(சம்பந்தர் தேவாரம், திருமுறை: 2, பதிகம்: 47, பாடல்: 1)

என்பதில், சாம்பலாகவும் எலும்பாகவும் இருந்த ஒன்று மீண்டும் பெண்ணாக உருவெடுத்த அந்தப் புதுமை மற்றும் ஆக்கம், காண்போர்க்கு வியப்பான மருட்கை மெய்ப்பாட்டினைத் தருகிறது. அதேபோல், திருமறைக்காட்டில் நீண்டகாலமாகத் திறக்கப்படாமல் இருந்த கதவுகள் சம்பந்தரின் பாடல் வலிமையால் திறந்த நிகழ்வும் மருட்கைக்கு உரியது.

### 5. அச்சம் (பயம்)

அச்சம் என்பது உயிருக்கு நேரும் இடையூறுக்கோ அல்லது தீவினைப் பயனுக்கோ அஞ்சும் நிலையாகும். தொல்காப்பியர் அச்சம் தோன்றுவதற்கான காரணங்களாக, "அணங்கே விலங்கே கள்வர் தம் இறையெனப் பிணங்கல் சாலா அச்சம் நான்கே" (தொல். மெய். 8) என்று இலக்கணம் வகுக்கிறார். இதில் இறை என்பது உயிரைக் கவரும் கூற்றுவனையும் (எமன்), அணங்கு என்பது வருத்தத்தைத் தரும் தெய்வங்களையும் குறிப்பதாகப் பக்தி இலக்கியத்தில் விரிவுபடுத்தப்படுகிறது.

"இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே"
(சம்பந்தர் தேவாரம், திருமுறை 3, பதிகம் 4, பாடல் 1)

இப்பாடலில் வரும் இடர் (துன்பம்), தளர்வு மற்றும் எனதுறு நோய் (என்னைத் தொடரும் நோய்) ஆகிய சொற்கள் மனித வாழ்வின் நிலையாமையையும், அதனால் ஏற்படும் அச்சத்தையும் சுட்டிக்காட்டுகின்றன. வாழ்வில் இத்தகைய துன்பங்கள் தொடர்ந்து வந்து அச்சுறுத்தினாலும், உனது அருள்திறம் என்னைக் காக்கும் என்று சம்பந்தர் பாடுகிறார். உலகியல் ரீதியாக ஒருவருக்கு அச்சத்தைத் தரும் நோய் மற்றும் துன்பங்களை, இறை நம்பிக்கையின் மூலம் கடக்கும் ஆன்மீகப் பக்குவம் இங்கு அச்சம் எனும் மெய்ப்பாடாக வெளிப்பட்டுள்ளது.

### 6. பெருமிதம் (ஆன்மீக வீரம்)

பெருமிதம் என்பது கல்வி, வீரம், புகழ் மற்றும் கொடை ஆகிய பண்புகளால் உண்டாகும் மன எழுச்சியாகும். இதனைத் தொல்காப்பியர்,

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே."
(தொல். மெய். 9)

எனக் கூறுகிறார். சம்பந்தர் தேவாரத்தில் அஞ்சாமை மற்றும் சிவபெருமானைச் சார்ந்திருப்பதால் வரும் புகழ் ஆகிய நிலைகள் பெருமித மெய்ப்பாடாக வெளிப்படுகின்றன.

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
(சம்பந்தர் தேவாரம், திருமுறை 2, பதிகம் 85, பாடல் 1)

எனவரும் பாடலில் 'அடியார் அவர்க்கு மிகவே' என்ற குறிப்பு, இறைவனைத் தன் உள்ளத்தில் இருத்திய அடியவர்களுக்குக் கோள்களும் காலமும் யாதொரு தீங்கும் செய்யாது என்ற அஞ்சாமையை உணர்த்துகிறது. நவகிரகங்களின் தீய பலன்களையும் வெல்லும் ஆன்மீக வலிமை (தறுகண்) மற்றும் அதன் மூலம் கிட்டும் மன உறுதி இங்கு பெருமித மெய்ப்பாடாகத் திகழ்கிறது.

### 7. வெகுளி

வெகுளி என்பது ஒருவருடைய அறிவு, குலம், ஒழுக்கம் போன்றவற்றிற்குத் தீங்கு ஏற்படும்போது உண்டாகும் சினமாகும். இதனைத் தொல்காப்பியர்,

"உறுப்பறை குடிகோள் அலைகொலை
என்றவை அறுப்பற்ற வந்த வெகுளி நான்கே"
(தொல். மெய். 10) என்கிறார்.

பக்தி இலக்கியத்தில் இச்சினம் தனிமனிதக் கோபமாக அன்றி, அறநெறியைச் சீர்குலைப்பவர்கள் மீதான தார்மீகக் கோபமாக உருமாறுகிறது.

"வெள்ளைத்திங்கள் வாண்முக மாதர்பாட
வீழ்சடைப்
பிள்ளைத்திங்கள் சூடியோ ராடன்மேய
பிஞ்ஞகன்
உள்ளத்தார்சிற் றேமத்தா னுருவார்புத்த
ரொப்பிலாக்
கள்ளத்தாரைத் தானாக்கியுட்
கரந்துவைத்தான் அல்லனே."
(சம்பந்தர் தேவாரம், திருமுறை 3, பதிகம் 42, பாடல் 10)

என்ற பாடலில், மெய்நெறியைப் பற்றாது மக்களைத் திசைதிருப்பும் புறச்சமயத்தவர்களை 'ஒப்பிலாக் கள்ளத்தார்' என்று சாடுவதன் மூலம், சமய உண்மைகளை நிலைநாட்டும் ஒரு பேரறிஞனின் அறக்கோபம் இப்பாடலில் புலனாகிறது. இச்சினம் தனிமனிதக் காழ்ப்புணர்ச்சி சார்ந்தது அன்று; மாறாக, அறநெறி சிதையாமல் சமூகத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தில் எழுந்ததாகும் என்பதை, அத்தகைய வஞ்சகர்களுக்கு இறைவன் தன்னை வெளிப்படுத்தாமல் 'உட்கரந்து' நிற்கிறான் என்ற குறிப்பின் வாயிலாகச் சம்பந்தர் உறுதிப்படுத்துகிறார்.

### 8. உவகை (பேரின்பம்)

மெய்ப்பாட்டியலின் இறுதியில் அமையும் உவகை என்பது செல்வம், அறிவு, விளையாட்டு போன்ற காரணங்களால் ஏற்படும் மகிழ்ச்சியாகும். "செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று அல்லல் நீத்த உவகை நான்கே" (தொல். மெய். 11) என்பது நூற்பா. பக்தி இலக்கியத்தில் இது 'பேரின்பம்' அல்லது 'பரமானந்த' நிலையை உணர்த்தும். திருஞானசம்பந்தர்,

"மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான்
திருநீறே."
(சம்பந்தர் தேவாரம், திருமுறை 2, பதிகம் 66, பாடல் 1)

என இறைவனது திருநீற்றின் மகிமையைப் பாடும்போது, அந்தப் புனிதப் பொருளைப் பெற்றுக் கொண்டதால் ஏற்படும் மனநிறைவும் மகிழ்ச்சியும் இங்கு 'உவகை' மெய்ப்பாடாக மாறுகிறது. துயரங்கள் நீங்கி (அல்லல் நீத்த), இறைவனது அருட்செல்வத்தைப் பெற்றதால் உண்டாகும் ஆன்மீகக் களிப்பு பக்தி இலக்கியத்தின் இறுதி இலக்காக அமைகிறது.

### முடிவுரை

தொல்காப்பியர் வகுத்த எண்வகை மெய்ப்பாடுகளும் திருஞானசம்பந்தரின் தேவாரப் பனுவல்களில் உலகியல் எல்லைகளைக் கடந்து ஆன்மீகப் பேருணர்வுகளாகப் பரிணமிக்கின்றன. சங்க இலக்கியங்களில் மாந்தர்களுக்கிடையில் வெளிப்பட்ட உணர்ச்சிகள், சம்பந்தரின் பாடல்களில் இறைவனுக்கும் அடியவருக்குமான உறவுப் பாலமாக உருமாற்றம் பெற்றுள்ளன. இதன் மூலம், பக்தி என்பது வெறும் வழிபாட்டு முறை மட்டுமல்ல, அது ஒரு நுட்பமான அழகியல் மற்றும் உணர்ச்சிக் கோட்பாடு என்பதை இவ்வாய்வு உறுதிப்படுத்துகிறது.

### துணை நூற்பட்டியல்


1. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
2. திருஞானசம்பந்தர், திருமுறை 1, 2, 3 (மூலமும் உரையும்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2012.
3. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு (ஏழாம் நூற்றாண்டு), தி பார்க்கர் பதிப்பகம், சென்னை, 2005.
4. இரத்தினசபாபதி, வை., திருஞானசம்பந்தர் - ஓர் ஆய்வு, சென்னை பல்கலைக்கழக வெளியீடு, சென்னை, 1981.
5. சுந்தரமூர்த்தி, கு., தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் - ஓர் ஆய்வு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1995.
6. தெய்வசிகாமணி (தேசிகன்), பக்தி இலக்கியத்தில் மெய்ப்பாடுகள், பாரி நிலையம், சென்னை, 2002.
7. வரதராசன், மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புது தில்லி, 2015.
8. வெள்ளைவாரணனார், க., பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 1972.
9. தமிழ் இணையக் கல்விக்கழகம், மின்நூலகம், www.tamilvu.org.
10. மதுரைத் திட்டம், பன்னிரு திருமுறை மின்பதிப்பு, www.projectmadurai.org.